## மாகாண வீதிகள் செயற்திட்டம் - ஊவா மாகாணம் - 2013

மாகாண வீதிகள் செயற்திட்டம் - ஊவா மாகாணத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திட்ட 2010 சனவரி 11 ஆம் திகதிய 4630 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.09 (ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

மாகாண வீதிகள் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, ஊவா, கிழக்கு மற்றும் வடக்கு மாகாண சபைகள் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளதுடன் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளது. முன்னேற்றப்பட்ட வீதி உட்கட்டமைப்பின் நிலைபேறான முகாமைத்துவத்தின் ஊடாக பெறுனரின் ஊவா, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களிலுள்ள சமூக பொருளாதார நிலையங்களுக்கான அணுகுவழியை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக உள்ளது. செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் படி, செயற்திட்டம் - ஊவா மாகாணத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 65.34 மில்லியனானதுடன் அதில் ஐ.அ.டொலர் 57.74 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் (ஐடிஏ) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 மார்ச் 31 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்க வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல்

என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத்

தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டம் - ஊவா மாகானத்தின் செலவினம் ரூபா. 2,544,335,650 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 5,580,639,968 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 1,617,209,664 | 786,063,771 | 3,873,907,575 |
| வீதிப் பராமரிப்பு | 730,787,805 | 371,665,641 | 1,213,948,793 |
| ஆலோசனை சேவைகள் | 175,418,612 | 111,029,406 | 422,302,057 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 74,524 | 5,204,710 | 10,934,395 |
| பயிற்சி மற்றும் செயலமர்வுகள் | - | (294,000) | 100,000 |
| அதிகரிக்கும் மற்றும் செயற்பாட்டுக் கிரயம் | 20,845,045 | 18,005,123 | 59,447,148 |
| மொத்தம் | 2,544,335,650 | 1,291,674,651 | 5,580,639,968 |

## 4.2 விசேட (டொலர்) கணக்குகள்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, செயற்திட்ட ஒருங்கிணைப்புக் கூறு, செயற்திட்ட அமுலாக்கல் கூறு- ஊவா, செயற்திட்ட அமுலாக்கல் கூறு- கிழக்கு மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் கூறு- வடக்கு மாகாணம் என்றவாறு நான்கு புறம்பான விசேட (டொலர்) கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போதான ஊவா மாகாணத்தின் விசேட (டொலர்) கணக்கிற்கான செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

| | யூ.எஸ்.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 3,866,083.03 | 491,614,211 |
| கூட்டுக: | | |
| மீளளிப்புகள் | 15,475,901.00 | 1,982,470,659 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 23,170,618 |
| | 19,341,984.03 | 2,497,255,488 |
| கழி:- | | |
| பற்றுதல்கள் | 17,918,920.26 | 2,311,185,631 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 1,423,063.77 | 186,069,857 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 07 ஆம் இணைப்பின் 29 மற்றும் 30 ஆம் பந்திகளின் பிரகாரம் காலாண்டு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் அமுலாக்கல் முகவர் மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென வேண்டப்பட்ட போதிலும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீதான உள்ளக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் செய்றபாட்டு மீளாய்வு

### 6.1 நிதி மீளாய்வு

செயற்திட்ட அமுலாக்கல் கூறு- ஊவா மாகாணம் தொடர்பான மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமை என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதிகளின் பயன்பாடு | | | | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப் பட்ட நிதிகள் | | ஏற்பாட்டின் சதவீதமாக 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப் பட்ட நிதிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டிற்கான நிதிகளின் பயன்பாடு | | | |
| | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | % |
| ஐடிஏ | 57.74 | 7,542 | 2,339 | 2,311.18 | 42.47 | 5,207.19 | 69 |
| இலங்கை வங்கி | 7.60 | 950 | 279 | 233.15 | - | 373.44 | 32 |
| மொத்தம் | 65.34 | 8,492 | 2,618 | 2,544.33 | - | 5,580.63 | 66 |

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் 75 சதவீத காலம் கடந்த பின்னர், மொத்த ஒதுக்கப்பட்ட நிதிகளில, 66 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டிருந்தது.

## 6.2 பௌதீக செயலாற்றல்

(அ) மாகாண வீதிகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றம்

செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், ஊவா மாகாணத்தின் 117.06 கிமீ நீளமான ஆறு மாகாண வீதிகள் ரூபா 4,879 மில்லியன் (வற் தவிர) கிரயத்தில் புனரமைப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 82.51 கிமீ நீளமான நான்கு வீதிகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 20.05 கிமீ நீளமான களடுவா- கந்தகெட்டிய- கிரிமெத்திய வீதியின் (ஊவா- 02) புனரமைப்பிற்கான ஒப்பந்தம் 2012 நவம்பர் மாதத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய புனரமைப்பு வேலைகள் மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியது.

(ii) கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், கொட்டேகொட- மஸ்பன்ன- ஜலகம்முவ வீதியின் (ஊவா-01) புனரமைப்பு வேலைகள் 2013 செப்தெம்பர் 17 இல் போதியளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தால் செய்யப்பட்ட வேண்டுகையின்படி, தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பால் (என்பீஆர்ஓ) 2013 செப்தெம்பர் 23 இல் வீதியின் 1+860 கிமீ முதல் 15+750 கிமீ வரையான இடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பால் செய்யப்பட்ட சிபார்சுகளின் பிரகாரம், புதிய எல்லை அளவைகள் இரண்டு இடங்களில் செய்யப்பட வேண்டியதுடன் சரிவுப் பகுதி அளவைகள் ஏனைய இடங்களில் மேற்கொள்ள வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய சிபார்சுகளின் அமுலாக்கல் பற்றிய சான்றுகள் கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை. மேலும், முறையான வடிகாலமைப்பு முறைமைகள் இன்மை காரணமாக ஆழமான சரிவுடன் கூடிய 20+000 கிமீ முதல் 23+420 கிமீ வரையான பிரிவில் வண்டி ஓடு பாதையில் சேதமடையும் ஆபத்திலுள்ள நிலை அந்த உரிய வீதியில் 2014 ஏப்ரல் 22 இல் மேற்கொள்ளப்பட்ட களக் கணக்காய்வில் தெரிந்தது. வீதி இரு பகுதிகளும் மழைக் காலத்தின் போது கழுவிச் செல்லப்பட்டிருந்தது.

(iii) மேலும ஹக்கல போட்- மக்டோனால் வீதியில், 4+450 கிமீ இல் (ஊவா- 04) நிர்மாணிக்கப்பட்ட கால்வாய் வதிவிடக்காரர்களால் பலாத்காரமாக மூடப்பட்டிருந்ததுடன் இதன் விளைவாக, இருக்கின்ற

வீதி மற்றும் தடுப்புச் சுவர் எனடபன சேதமடையும் ஆபத்தில் இருந்தது.

(iv) ரூபா 3,052,719 கிரயத்தில் மெடித்தல – கிரிவேகர வீதியில் (ஊவா - 05) நிர்மாணிக்கப்பட்ட எல்லைச் சுவர் 2012 திசெம்பர் 17 இல் முழுமையாக சேதமடைந்திருந்தது. இது நிலைபேறான வீதியின் நிலைமைக்கு எல்லைச் சுவர் நிர்மாணிக்க காரணியாக உள்ளதல் உரிய எல்லைச் சுவரின் உள்ளதன்மையை ஒப்பந்தகாரர் மூலம் புதுப்பித்து பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக ஒப்பந்தகாரரிடமிருந்து நிர்மாணக் கிரயத்தை அறிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஊவா மாகாணத்திற்கான ஒழுங்கான வீதிப் பராமரிப்பு மற்றும் வீதிப் பராமரிப்பு உபாயமொன்றின் அபிவிருத்தி

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ஊவா மாகாணத்தில் ஒழுங்கான வீதிப் பராமரிப்பு வேலைகளிற்காக ஐ.அ.டொலர் 10 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இந்த கூறின் கீழ் 76 ஒப்பந்த பொதிகள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், வீதிப் பராமரிப்பு வேலைகளின் மேற்பார்வைகளான ஒழுங்கு முறை கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்றிராமையால் ஒழுங்கான வீதிப் பராமரிப்பு வேலைகளின் பௌதீக முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது.

(ii) ஊவா மாகாணத்திற்கான வீதிப் பராமரிப்பு உபாயமொன்றுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கூட பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்

காணித் தீர்ப்பனவு மற்றும் ஏனைய வேலைகளைக் கவனிப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிராந்திய அலுவலகத்தின் ஏழு உத்தியோகத்தர்கள் மற்றும் ஊவா மாகாண சபையின் வீதிகள் அமைச்சின் திட்டமிடல் உத்தியோகத்தர் என்போருக்கு செயற்திட்டத்தால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 852,226 கூட்டு மொத்தத் தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன. மேலும், ஆலொசனையாளரொருவர் மற்றும் சுற்றாடல் உத்தியோகத்தர் ஒருவர் என்போரும் அதே விடயங்களின் கடமைகளிற்காக செயற்திட்டத்தல் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். சில உத்தியோகத்தர்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல வீதிகளின்

புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்கப்பட்ட பின்னரும் தொடர்ச்சியாக சில உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.